# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 12

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாரதி |
| Father's Name | : | P. செல்லப்பன் |
| Village | : | வடிவீஸ்வரம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | நாடார் |
| Calling | : | காவல் துறை |
| Religion | : | இந்து |
| Age | : | 46 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>13.06.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள புகைப்பட பிரிவில் காவல் துறை சம்பந்தமாக போட்டோ மற்றும் வீடியோ எடுக்கும் பணியில் இருந்து வருகிறேன். என்னுடன் தலைமை காவலர் 2535 நீலகண்டன் என்பவரும் பணிபுரிந்து வருகிறார். 29.08.2023 ஆம் தேதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலக உத்தரவு படி வடசேரி காவல் நிலைய குற்ற எண். 120/2023 பிரிவு 302 இ.த.சா. வழக்கில் இறந்து போன மனோஜ் என்பவரின் பிரேதத்தை

ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை சவ கிடங்கில் பிரேத பரிசோதனை செய்ததை 13.00 மணிமுதல் 14.00 மணிவரை பிரேத பரிசோதனை செய்ததை வீடியோ எடுத்து நீலகண்டன் Memory Card னை எடுத்து பேராசிரியரிடம் கொடுத்தார். நான் காயங்களை போட்டோ எடுத்து 8 போட்டோக்களை 2 பிரதிகள் போட்டு 2 சிடிக்கள் போட்டு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65 (b) ன் படி ஒரு சான்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் எடுத்த போட்டோக்கள் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த சிடி யும் அப்போது நான் கொடுத்ததுதான். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த பிரிவு 65(b) சான்று போட்டோக்கள் சா.பொ. 8 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. சிடி சா.பொ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சான்றிதழ் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்டுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் சொன்னது போல சொன்ன நேரத்தில் எந்த பணியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த போட்டோகளுக்கும், எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல.